பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

01 10 2025 6 45

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு. நரேந்திர மோடி, புதுதில்லியில் இன்று, RSS நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தில் கலந்துகொள்கிறார்.
- நாடு முழுவதும் இன்று ஆயுத பூஜை கொண்டாடப்படுகிறது.
- திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி அருகே அனல் மின் நிலைய கட்டுமானப் பணியில் ஏற்பட்ட விபத்தில் 9 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.
- பொன்னேரி விபத்தில் உயிரிழந்த தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு பிரதமரின் நிவாரண நிதியில் இருந்து தலா 2 லட்சம் ரூபாயும், முதலமை நிவாரண நிதியில் இருந்து தலா 10 லட்சம் ரூபாயும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
- உலகக் கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 59 ரன் வித்தியாசத்தில் இலங்கை அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<< >>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, புதுதில்லியில் இன்று, RSS நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தில் கலந்துகொள்கிறார்.

இந்நிகழ்ச்சியில் RSS அமைப்பு நாட்டிற்கு வழங்கிய பங்களிப்பை போற்றும் வகையில் சிறப்பு அஞ்சல் தலை மற்றும் நாணயத்தையும் பிரதமர் வெளியிடுகிறார்.

நாட்டின் ஒற்றுமை மற்றும் கலாச்சாரத்தைப் பேணிக் காப்பதில் RSS-ன் பணிகளை எடுத்துரைக்கும் வகையில் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது.

<<<< >>>>

நவராத்திரி பண்டிகையின் 9ஆம் நாளான இன்று நாடு முழுவதும் ஆயுத பூஜையாக கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி தொழில் நிறுவனங்கள், அலுவலகங்கள் மற்றும் வீடுகளில் மக்கள் தாங்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களை சுத்தம் செய்து வழிபடுகின்றனர்.

பத்தாம் நாளான நாளைய தினம் தசரா மற்றும் விஜயதசமியாக கொண்டாடப்படுகிறது.

இதனிடையே தில்லி சித்தரஞ்சன் பூங்காவில் நேற்று நடைபெற்ற துர்கா பூஜை கொண்டாட்டங்களில் பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்துகொண்டு வழிபட்டார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், நாட்டு மக்களின் மகிழ்ச்சி மற்றும் நலனுக்காக பிரார்த்தனை செய்ததாக குறிப்பிட்டுள்ளார்.

<<<< >>>>

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி அருகே எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டலத்தில் பாரத மிகுமின் நிறுவனத்தால் அமைக்கப்பட்டு வரும் அனல்மின் நிலைய கட்டுமானப் பணியின்போது, சாரம் சரிந்து விழுந்ததில், கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த 9 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். ஒருவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

இந்த விபத்து குறித்து ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாக கூறியுள்ளார்.

மேலும் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு தலா 2 லட்சம் ரூபாயும், காயமடைந்தோருக்கு 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் பிரதமர் அறிவித்துள்ளார்.

இதேபோன்று தமிழக அரசின் சார்பில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு தலா 10 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர்களது உடலை சொந்த மாநிலத்திற்கு எடுத்துச் செல்ல நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.

<<<< >>>>

கரூர் த.வெ.க. கூட்ட நெரிசல் சம்பவம் குறித்த ஆய்வறிக்கை பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் பிஜேபி தலைவர் திரு. ஜெ.பி. நட்டாவிடம் வழங்கப்படும் என்று தேசிய ஜனநாயக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் குழுவின் தலைவர் திருமதி ஹேமமாலினி தெரிவித்துள்ளார்.

தங்களது ஆய்வை முடித்துக்கொண்டு தில்லி திரும்பும் வழியில் கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த ஆய்வறிக்கையை உச்சநீதிமன்றம் மற்றும் சி.பி.ஐ-யிடமும் வழங்க திட்டமிட்டிருப்பதாக கூறினார்.

தாங்கள் விசாரித்தவரை சிறிய இடத்தில் கூட்டம் நடத்த அனுமதிக்கப்பட்டது தெரியவந்துள்ளதாகவும், கூட்டம் அதிகமாகும்போது பாதுகாப்பை அதிகரித்திருக்க வேண்டும் என்றும் திருமதி ஹேமமாலினி குறிப்பிட்டார்.

<<<< >>>>

முல்லைப்பெரியாறு அணையில் இருந்து தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கில் உள்ள பி.டி.ஆர். மற்றும் தந்தை பெரியாறு வாய்க்காலின் கீழ் உள்ள ஒருபோக பாசன நிலங்களுக்கு இன்று முதல் தண்ணீர் திறந்துவிடப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக நீர்வளத்துறை செயலாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், வினாடிக்கு 100 கன அடி வீதம் 120 நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று 18ஆம் கால்வாய் பாசன நிலங்களுக்காக வினாடிக்கு 98 கன அடி வீதம் 30 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

இதன் மூலம் தேனி, உத்தமபாளையம் மற்றும் போடிநாயக்கனூர் வட்டங்களில் உள்ள 9 ஆயிரத்து 760 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

<<<< >>>>

சர்வதேச முதியோர் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. இந்நாளையொட்டி சென்னை கிண்டியில் உள்ள தேசிய முதியோர் நல மருத்துவமனையில் "ஆரோக்கியமான மகளிர் - வலிமையான குடும்பம்" இயக்கத்தின் கீழ் நடைபெற்ற மருத்துவ முகாமை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், சென்னையில் உள்ள முதியோர் நல மருத்துவமனையில் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் 3 லட்சத்து 80 ஆயிரம் முதியோர் சிகிச்சை பெற்றிருப்பதாக கூறினார்.

நாட்டின் பிற மாநிலங்களில் இல்லாத வகையில், தமிழகத்தில்தான் 100 முதியோர் நல மருத்துவர்கள் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் சுமார் 60 லட்சம் ரூபாய் மதிப்பிலான மருத்துவ உபகரணங்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டதாகவும் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

<<<< >>>>

இனி, மக்களின் மனதை வென்ற மத்திய அரசின் திட்டங்கள் ...

சேவை, நல்லாட்சி என்பதை தாரக மந்திரமாகக் கொண்டு, ஓய்வின்றி பணியாற்றி வரும் பிரதமர் திரு.நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, சிறந்த நிர்வாகத்தின் மூலம், மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது.

இது குறித்த சிறப்பு தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது, இந்தியாவின் ஜி 20 வெற்றி மூலம், தெற்கு நாடுகளின் குரலை வெளிப்படுத்தவும், இந்தியாவின் தலைமைத்துவத்தை உலகளவில் எடுத்துரைக்கவும் மோடி அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள்.

(சவுண்ட் பைட் .... வினாடிகள்)

*பிரதமர் திரு.நரேந்திர மோடியின் தலைமையின்கீழ், உலகின் முன்னணி நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது. 2023-ம் ஆண்டு, ஜி 20 அமைப்பின் தலைமைப் பொறுப்பை இந்தியா வகித்தபோது, தெற்கு நாடுகளின் குரலை இந்தியா வெளிப்படுத்தியதுடன், இந்த அமைப்பில் ஆப்பிரிக்க யூனியனை உறுப்பினராக்கியது, உலகளாவிய உயிரி எரிபொருள் கூட்டணியும் தொடங்கப்பட்டது. இந்தியாவின் தலைமைத்துவ காலத்தில், "வசுதைவ குடும்பகம்" என்ற மையக்கருத்து, இந்தியாவின் நாகரீகப் பண்பையும், உலகளாவிய ஒத்துழைப்பிற்கான விருப்பத்தையும் பிரதிபலிப்பதாக அமைந்தது. புதுதில்லி பிரகடனமும், இந்த முன்னுரிமைத் துறைகளில் ஒத்துழைப்பிற்கான ஆர்வம், கொள்கை இணக்கம், நம்பகமான வர்த்தகம், மற்றும் பருவநிலை மாற்ற செயல்பாடுகளை உள்ளடக்கியதாக இருந்தது. இதற்கு முந்தைய மாநாடுகளின்போது பிரகடனம் குறித்து, ஒருமித்த கருத்தை ஏற்படுத்துவது சவாலானதாக இருந்த நிலையில், தில்லி பிரகடனத்தில் 20 உறுப்பு நாடுகளும் கையெழுத்திட்டது சிறப்பு வாய்ந்தது ஆகும். ஜி-20 அமைப்பில் ஆப்பிரிக்க யூனியனை நிரந்தர உறுப்பினராக்கியதன் மூலம், இந்த அமைப்பு உலகின் மொத்த மக்கள் தொகையில் 80 சதவீதத்தினரை உள்ளடக்கியதாக விரிவுபடுத்தப்பட்டது. இந்தியாவின் தலைமைத்துவ காலம் சிறிய நாடுகளின் கரலை வெளிப்படுத்த வாய்ப்பாக அமைந்ததுடன், அவர்களது ஒட்டுமொத்த நலனை*

*பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான அமைப்பாகவும் திகழ்ந்தது என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.*

*(பிரதமர் மோடி தமிழ் பைட் .......... வினாடிகள்)*

*இந்தியாவின் தலைமைத்துவ காலம், தெற்கு நாடுகளுக்காக குரல் கொடுத்ததோடு மட்டுமின்றி, இந்த அமைப்பின் கூட்டங்களை நாடு முழுவதும் நடத்தியதன் வாயிலாக, நமது கலாச்சார பாரம்பரியத்தை உலக நாடுகளுக்கு எடுத்துரைக்கவும் வழிவகை செய்தது. வரலாற்றுச் சிறப்புமிக்க தலங்களுக்கு அருகே நடைபெற்ற இந்த நிகழ்ச்சிகள், இந்தியாவின் பன்முக பாரம்பரியம் மற்றும் கலைத் திறனை எடுத்துக் கூறுவதாக அமைந்ததுடன், கலாச்சாரம் மற்றும் பொருளதார வளர்ச்சியில் இந்தியா உலகின் முன்னணி நாடாக திகழ்வதற்கு வலு சேர்க்கும் வகையிலும் அமைந்திருந்தன.*

*<<<< >>>>*

*<u>இருவரிச் செய்திகள்</u>*

பிலிப்பைன்சில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 22 பேர் உயிரிந்தனர்.

*<<<< >>>>*

செயல்படாத வங்கிக் கணக்குளை மீண்டும் செயல்பாட்டிற்கு கொண்டுவர இன்று முதல் ஓராண்டு அவகாசம் வழங்கப்படுவதாக ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

*<<<< >>>>*

புதுதில்லியில் நேற்று காலமான பிஜேபி மூத்த தலைவர் திரு. வி.கே. மல்ஹோத்ராவின் இறுதிச் சடங்கு முழு அரசு மரியாதையுடன் நடைபெறும் என்று தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா தெரிவித்துள்ளார்.

*<<<< >>>>*

ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தில் சேர்வதற்கான விருப்பத்தை தெரிவிப்பதற்கான அவகாசம் நவம்பர் 30ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

*<<<< >>>>*

*நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் நடைபெற்ற விழாவில் மாநில அமைச்சர் திரு. மதிவேந்தன், சுமார் இரண்டரை கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.*

*<<<< >>>>*

*தருமபுரி மாவட்ட தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் மாணவர்களுக்கான பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகள் வரும் 14, 15ஆம் தேதிகளில் நடைபெற உள்ளது.*

*<<<< >>>>*

*திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடியில் தொடர் வாகன திருட்டில் ஈடுபட்ட நபர் கைது செய்யப்பட்டு அவரிடம் இருந்து 15 இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டது.*

*<<<< >>>>*

*திருவள்ளூர் மாவட்டம் பெரியபாளையம் அருகே தீயணைப்புத் துறை மற்றும் வருவாய் துறை சார்பில் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்வதற்கான ஒத்திகை நடைபெற்றது.*

*<<<< >>>>*

*காஞ்சிபுரம் காமாட்சியம்மன் ஆலய நவராத்திரி திருவிழாவில் கையில் சூலம் ஏந்திய அலங்காரத்தில் துர்கையுடன் காட்சியளித்த அம்பாளை ஏராளமான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.*

*<<<< >>>>*

*ஆயுத பூஜை பண்டிகையை முன்னிட்டு மதுரையில் இருந்து தாம்பரத்திற்கு இன்று முன்பதிவில்லா சிறப்பு ரயில் இயக்கப்படுவதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.*

*<<<< >>>>*

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

*உலகக் கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 59 ரன் வித்தியாசத்தில் இலங்கை அணியை வென்றது.*

குவஹாத்தியில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் 47 ஓவராக குறைக்கப்பட்டது.

முதலில் களமிறங்கிய இந்திய அணி 8 விக்கெட் இழப்பிற்கு 269 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக Amanjot Kaur 57 ரன்னும் தீப்தி ஷர்மா 53 ரன்னும் எடுத்தனர்.

பின்னர் டக்வொர்த் லூயிஸ் முறையில் இலங்கை அணி வெற்றி பெற 271 ரன் இலக்கு ரன் நிர்ணயிக்கப்பட்ட நிலையில், அந்த அணி 45 புள்ளி 4 ஓவரில் 211 ரன் எடுத்து ஆட்டமிழந்தது.

<<<< >>>>